உ

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையார்

என்கின்ற

திருச்சிற்றம்பலக்கோவையார்.

வேதாந்த சித்தாந்த சைவசமயாசாரியராய்

திருவாதவூரிலெழுந்தருளியிருந்த

மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது,

அச்சிற்பதிப்பித்திருக்குந் திருவாசகத்தோடியைபுற்றிருக்கவேண்டுமாதலாலேட்டுப்பிரதிகளிற்பாடந்தோறுமொன்றற்கொன்றொவ்வாமற் றுகள்களாற் பொதிவுற்றிருத்தலினத்துகள்களை நீக்கிச் சுத்தபாடமாகவழங்குவிக்கும்பொருட்டுச்

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவராகிய

புதுவை,

நயநப்ப முதலியாரால்

ஆதீனவித்துவான்களிடத்திலிருந்துபலபிரதிகளைவருவித்து

நச்சினார்க்கினியாருரைக்கிணங்கினதாகப்

பரிசோதித்

தச்சிற்பதித்தபிரதிக்கிணங்க

முத்தமிழ்விளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

உ

கற்பகவிநாயகன்றுணை.

திருக்கோவையாரென்கின்ற

திருச்சிற்றம்பலக்கோவை.

வெண்பா.

எண்ணிறைந்ததில்லையெழுகோபுரந்திகழக் ....*
கண்ணிறைந்துநின்றருளுங்கற்பகமே - நண்ணியசீர்த்.*
தேனூறுசெஞ்சொற்றிருக்கோவையென்கின்ற ...... *
நானூறுமென்மனத்தேநல்கு... ....*

திருக்கோவையார்தன்மை.

ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின் ... ...*
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப ....*
ஏரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்..*
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே ... ... *

(காட்சி.)

மதிவாணுதல்வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன்கண்ணுற்ற து.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக் .. ..*
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ.*
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந் ....*
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே...(க)

(ஐயம்.)

தெரியவரியதோர்தெய்வமென்ன
அருவரைநாடனையுற்ற - து.

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ...........*
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த ....*
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை .. *
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே.........(உ)

(தெளிதல்.)

அணங்கல்லளென்றயில்வேலவ - ன்
குணங்களைநோக்கிக் குறித்துரைத்தது.

பாயும்விடையரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்கும்...*
தோயுநிலத்தடிதாமலர்வாடுந்துயரமெய்தி.................*

யாயுமனையணங்கல்லளம்மாமுலைசுமந்து ....*
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே ... ... (௩)

(நயப்பு.)

வண்டமர்புரிகுழலொண்டொடிமடந்தையை
நயந்தவண்ணல்வியந்துள்ளிய - து

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவநீ.................
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க........*
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த ....*
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வளைக்கே......(௪)

(உட்கோள்.)

இறைதிருக்கரத்துமறிமானோக்கி
யுள்ளக்கருத்துவள்ளலறிந்த து.

அணியுமமிழ்துமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தர ......*
மணியும்பராரதியாமன்றையோனடிவாழ்த்தலரிற் ....*
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழமின்னும் ....*
பணியும்புரைமருங்குற்பெருந்தோளிபடைக்கண்களே...(௫)

(தெய்வத்தைமகிழ்தல்.)

அன்னமென்னடையரிவையைத்தந் - தி
மன்னிருந்தெய்வத்தைமகிழ்ந்துரைத்தது.

வளைபயில்கீழ்க்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின் ....*
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக் ... *
கிளைவயினீக்கியிக்கொண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த... ...*
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே.........(௬)

(புணர்ச்சிதுணிதல்.)

கொவ்வைச்செவ்வாய்க்கொடியிடைப்பேதையைத்
தெய்வப்புணர்ச்சிசெம்மறுணிந்த - து.

ஏழுடையான்பொழிலெட்டுடையான்புயமென்னைமுன்னா... ...*
ளூழுடையான்புலியூரன்னபொன்னிவ்வுயர்பொழில்வாய்ச்......*
சூழுடையாயத்தைநீக்கும்விதிதுணையாமனனே.................*
யாழுடையார்மணங்காணணங்காய்வந்தகப்பட்டதே.............(௭)

(கலவியுரைத்தல்.)

கொலைவேலவன்கொடியிடையொடு
கலவியின்பங்கட்டுரைத்த - து.

சொற்பாலமிழ்திவள்யான்சுவையென்னத்துணிந்திங்ஙனே *
நற்பால்வினைத்தெய்வந்தந்தின்றுநானிவளாம்பகுதிப் ....*
பொற்பாரறிவார்புலியூர்ப்புனிதன்பொதியில்வெற்பிற் ...*
கற்பாவியவரைவாய்க்கடிதோட்டகளவகத்தே ....(௮)

(இருவயினொத்தல்.)

ஆராவின்பத்தன்புமீதூ - ர
வாரார்முலையைமகிழ்ந்துரைத்த து

உணர்ந்தார்க்குணர்வரியோன்றில்லைச்சிற்றம்பலத்தொருத்தன், கு
ணத்தான்வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைதோ
ள்,புணர்ந்தாற்புணருந்தொறும்பெரும் போகம்பின்னும்புதிதாய்,
மணந்தாழ்புரிகுழலாளல்குல்போலவளர்கின்றதே... ....(௯)

(கிளவிவேட்டல்.)

அன்னமன்னவளவயவங்கண் - டு
மென்மொழிகேட்கவிருப்புற்ற - து

அளவியையார்க்குமறிவரியோன்றில்லையம்பலம்போல்........ ...*
வளவியவான்கொங்கைவாட்டடங்கண்ணுதன்மாமதியின்........*
பிளவியன்மின்னிடைபேரமைத்தோளிதுபெற்றியென்றாற் ... *
கிளவியையென்றோவினிக்கிள்ளையார்வாயிற்கேட்கின்றதே ... (௰)

(நலம்புனைந்துரைத்தல்.)

பொங்கிழையைப்புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோனயர்வுநீங்கிய து.

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும்... ... ...*
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற் ... . *
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவடீங்கனிவாய்கமழு..............*
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே ... (௰௧)

(பிரிவுணர்த்தல்.)

பணிவளரல்குலைப்பயிற்புறுத்தி - ப்
பிணிமலர்த்தாரோன்பிரிவுணர்த்தியது

சிந்தாமணிதெண்கடலமிர்தந்தில்லையானருளால்... ....*
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே ... ... *
யந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனே... .....*
சிந்தாகுலமுற்றென்னோவென்னைவாட்டந்திருத்துவதே(௰௨)

(பருவாலறிதல்.)

பிரிவுணர்ந்தபெண்கொடிதன்
பருவரலின்பரிசுநினைந்த து

கோங்கிற்பொலியரும்பேய்கொங்கைபங்கன்குறுகலரூர் ... ...*
றீங்கிற்புகச்செற்றகொற்றவன்சிற்றம்பலமனையா... ....*
ணீங்கிற்புணர்வரிதென்றோநெடிதிங்ஙனேயிருந்தா... ... .*
லோங்கிற்பழியாமெனவோவறிவோனயர்கின்றதே ... . (௰௩)

(அருட்குணமுரைத்தல்.)

கூட்டியதெய்வத்தின்னருட்குணம்
வாட்டமின்மைவள்ளலுரைத்த து.

தேவரிற்பெற்றநஞ்செல்வக்கடிவடிவார்திருவே ... ...*
யாவரிற்பெற்றினியார்சிதைப்பாரிமையாதமுக்கண் ... ...*
மூவரிற்பெற்றவர்சிற்றம்பலமணிமொய்பொழில்வாய்ப்...*
பூவரிற்பெற்றகுழலியென்வாடிப்புலம்புவதே ......(௰௪)

(இடமணித்துக்கூறிவற்புறுத்தல்.)

மடவரலைவற்புறுத் - - - - தி
இடமணித்தென்றவணியம்பிய - து.

வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலயத்.........*
திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப்... ......*
பருங்குன்றமாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க்.........*
கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே...(௰௫)

(ஆடிடத்துய்த்தல்.)

வன்புறையின்வற்புறுத் - தி
அன்புறுமொழியையருககன்றது

தெளிவளர்வான்சிலைசெங்கனிவெண்முத்தந்திங்களின்வாய்ந் ... *
தளிவளர்வல்லியன்னாய்முன்னியாடுபின்யானளவா ... ... *
வொளிவளர்தில்லையொருவன்கயிலையுகுபெருந்தேன் .... *
றுளிவளர்சாரற்கரந்துங்கணேவந்துதோன்றுவனே... ......(௰௬)

(அருமையறிதல்.)

சுற்றமுமிடனுஞ்சூழலுநோக்கி
மற்றவளருமைமன்னனறிந்தது.

புணர்ப்போலிலனும்விசும்பும்பொருப்புந்தன்பூங்கழலின்... ..*
றுணர்ப்போதெனக்கணியாக்குந்தொல்லோன்றில்லைச்சூழ்பொழி
ல்வா,யிணர்ப்போதணிகுழலேழைதன்னீர்மையிந்நீர்மையென்று
ற்,புணர்ப்போகனவோபிறிதோவறியேன்புகுந்ததுவே......(௰௭)

(பாங்கியையறிதல்.)

கடல்புரையாயத்துக்காதற்றோழி யை
மடவரல்காட்டமன்னனறிந்த - து.

உயிரொன்றுளமுமொன்றொன்றேசிறப்பிவட்கென்றோடென்னைப்
பயில்கின்றசென்றுசெவியுறநீள்படைக்கண்கள்விண்வாய்ச் ....*
செயிரொன்றுமுப்புரஞ்செற்றவன்றில்லைச்சிற்றம்பலத்துப் ...*
பயில்கின்றகூத்தனருளெனலாகும்பணிமொழிக்கே... ......(௰௮)

(பாங்கனை நினைதல்.)

எய்துதற்கருமையெழயிற்றோன்றப்
பையுளுற்றவன்பாங்கனைநினைந்தது.

பூங்கனைபார்புனற்றென்புலியூர்புரிந்தம்பலத்து .... *
ளாங்கெனையாண்டுகொண்டாடும்பிரானடித்தாமரைக்கே .... *
பாங்கனையானன்னபண்பனைக்கண்டிப்பரிசுரைத்தா .... *
லீங்கெனையார்தடுப்பார்மடப்பாவையையெய்துதற்கே......(௰௯)

(பாங்கன்வினாதல்.)

கலிகெழுதிரடோண்மெலிவதுகண் - டு
இன்னுயிர்ப்பாங்கன்மன்னனைவினாயது.

சிறைவான்புனற்றில்லைசிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு ..... *
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின் ...... *
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ...... *
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே...(௨௰)

(உற்றதுரைத்தல்.)

மற்றவன்வினவ
உற்றதுரைத்தது

கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞைகுஞ்சரங்கோளிழைக்கும் ...*
பாம்பைப்பிடித்துப்படங்கிழித்தாங்கப்பணைமுலைக்கே........*
தேம்பற்றுடியிடைமான்மடநோக்கிதில்லைச்சிவன்றா...........*
ளாம்பொற்றடமலர்சூடுமென்னாற்றலகற்றியதே ....(௨௧)

(கழறியுரைத்தல்.)

வெற்பனைத்தன்மெய்ப்பாங்கன்
கற்பனையிற்கழறிய - - து.

உளமாம்வகைநம்மையுய்யவந்தாண்டுசென்றும்பருய்யக்.........*
களமாம்விடமமிர்தாக்கியதில்லைத்தொல்லோன்கயிலை ....*
வளமாம்பொதும்பரின்வஞ்சித்துநின்றோர்வஞ்சிம்மருங்கு......*
லிளமான்விழித்ததென்றோவின்றெம்மண்ணலிரங்கியதே ...(௨௨)

(கழற்றெதிர்மறுத்தல்.)

ஆங்குயிரன்னபாங்கன்கழ - ற
வளர்ந்தருவெற்பனுளந்தளர்ந்துரைத்தது

சேணிற்பொலிசெம்பொன்மாளிகைத்தில்லைச்சிற்றம்பலத்து ... *
மாணிக்கக்கூத்தன்வடவான்கயிலைமயிலைமன்னும்.............*
பூணிற்பொலிகொங்கையாவியையோவியப்பொற்கொழுந்தைக்-*
காணிற்கழறலைகண்டிலைமென்றோட்கரும்பினையே...........(௨௩)

(கவன்றுரைத்தல்.)

கொலைக்களிற்றண்ணல்குறைநயந்துரைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன்கவன்றுரைத்த - து.

விலங்கலைக்கால்விண்டுமேன்மேலிடவிண்ணுமண்ணுமுந்நீர் .. *
கலங்கலைச்சென்றவன்றுங்கலங்காய்கமழ்கொன்றைதுன்று... ... *
மலங்கலைச்சூழ்ந்தசிற்றம்பலத்தானருளில்லவர்போற் .. ..*
றுலங்கலைச்சென்றிதென்னோவள்ளலுள்ளந்துயர்கின்றதே ...(௨௪)

(வலியழிவுரைத்தல்.)

நிறைபொறைதேற்றநீதியொடுசால் பு
மறியுறுநோக்கிற்குவாடினேனென்றது.

தலைப்படுசால்பினுக்குந்தளரேன்சித்தம்பித்தனென்று... ... ...*
மலைத்தறிவாரில்லையாரையுந்தேற்றுவனெத்துணையுங்.. ....*
கலைசிறுதிங்கண்மிலைத்தசிற்றம்பலவன்கயிலை ....*
மலைச்சிறுமான்விழியாலழிவுற்றுமயங்கினனே... ....(௨௫)

(விதியொடுவெறுத்தல்.)

கல்விமிகுபாங்கன்கழறவெள்கி - - ச்
செல்வமிகுசிலம்பன்றெரிந்துசெப்பியது

நல்வினையுந்நயந்தந்தின்றுவந்துநடுங்குமின்மேற்... ... ...*
கொல்வினைவல்லனகோங்கரும்பாமென்றுபாங்கன்சொல்ல ......*
வில்வினைமேருவில்வைத்தவன்றில்லைதொழாரின்வெள்கித் ... ... *
தொலவினையாற்றுயருமெனதாருயிர்துப்புறவே...... ...(௨௬)

(பாங்கனொந்துரைத்தல்.)

இன்னுயிர்ப்பாங்கனேழையைச்சுட் - டி
நின்னதுதன்மைநினைந்திலையென்ற - து.

ஆலத்தினாலமிர்தாக்கியகோன்றில்லையம்பலம்போற்....... ... ...*
கோலத்தினாள்பொருட்டாகவமிர்தங்குணங்கெடினுங்... ....*
காலத்தினான்மழைமாறினுமாறாக்கவிகைநின்பொற்......... ...*
சீலத்தைநீயுநினையாதொழிவதென்றீவினையே... ....(௨௭)

(இயலிடங்கேட்டல்.)

கழுமலெய்தியகாதற்றோழ - ன்
செழுமலைநாடனைத்தெரிந்துவினவியது.

நின்னுடைநீர்மையுநீயுமிவ்வாறுநினைத்தெருட்டு ....*
மென்னுடைநீர்மையிதென்னென்பதேதில்லையோர்கொண்முக்கண்
மன்னுடைமால்வரையோமலரோவிசும்போசிலம்பா...... ... ...*
வென்னிடம்யாதியனின்னையின்னசெய்தவீர்ங்கொடிக்கே (௨௮)

(இயலிடங்கூறல்.)

அழுங்கலெய்தியவாருயிர்ப்பாங்கற்கு - ச்
செழுங்கதிர்வேலோன்றெரிந்துசெப்பியது.

விழியாற்பிணையாம்விளங்கியலான்மயிலாமிழற்று ... ...*
மொழியாற்கிளியாமுதுவானவர்தமுடித்தொகைகள் ....*
கழியாககழற்றில்லைக்கூத்தன்கயிலைமுத்தம்மலைத்தேன் ....*
கொழியாத்திகழும்பொழிற்கெழிலாமெங்குலதெய்வமே ...(௨௯)

(வற்புறுத்தல்.)

பெயர்ந்துரைத்தபெருவரைநாட - னை
வயங்கெழுபுகழோன்வற்புறுத்திய து.

குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான். .....*
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய் ......*
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள் ......*
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறையே...(௩௰)

(குறிவழிச்சேறல்.)

அறைகழலண்ணலருளின்வ ழி
நிறைவுடைப்பாங்கனிணையொடுசென்றது.

கொடுங்கால்குலவரையேழேழ்பொழிலெழில்குன்றுமன்று.. ......*
நடுங்காதவனைநடுங்கநுடங்குநடுவுடைய............ ....*
விடங்காலயிற்கண்ணிமேவுங்கொலாந்தில்லையீசன்வெற்பிற் ... ..*
படங்கார்தருபெருவான்பொழினீழலந்தண்புனத்தே ....(௩௧)

(குறிவழிக்காண்டல்.)

குளிர்வரைநாடன்குறிவழிச்சென் - று
தளிர்புரைமெல்லடித்தையலைக்கண்டது.

வடிக்கண்ணிவைவஞ்சியஞ்சுமிடையிதுவாய்பவளந் ....*
துடிக்கின்றவாவெற்பன்சொற்பரிசேயான்றொடர்ந்துவிடா .....*
வடிச்சந்தமாமலரண்ணல்விண்ணோர்வணங்கம்பலம்போற் ......*
படிச்சந்தமுமிதுவேயிவளேயப்பணிமொழியே ....(௩௨)

(தலைவனைவியந்துரைத்தல்.)

நயந்தவுருவுநலனுங்கண் - டு
வியந்தவனைமெய்யமிகுத்துரைத்த து.

குவளைக்களத்தம்பலவன்குரைகழல்போற்கமலத் ....*
தவளைப்பயங்கரமாகநின்றாண்டவவயவத்தி ... .*
ணிவளைக்கண்டிங்குநின்றங்குவந்தத்தனையுட்பகர்ந்த ....*
கவளைக்களிற்றண்ணலேதிண்ணியானிக்கடலிடத்தே............(௩௩)

(கண்டமைகூறல்.)

பிடிமிசைவைத்துப்பேதைபதுநிலைமை
அடுதிறலண்ணற்கறியவுரைத்த - து.

பணந்தாழரவரைச்சிற்றம்பலவர்பைம்பொற்கயிலை............ *
புணர்ந்தாங்ககன்றபொருகரியுன்னிப்புனத்தயலே............ *
மணந்தாழ்பொழிற்கண்வடிக்கண்பரப்பிமடப்பிடிவாய்........ *
நிணந்தாழ்சுடரிலைவேலகண்டேனொன்றுநின்றதுவே...... (௧௪)

(செவ்விசெப்பல்.)

அற்புதன்கயிலைமற்பொலிசிலம்ப ற்
கவ்வுருக்கண்டவன்செவ்விசெப்பியது.

கயலுளவேகமலத்தலர்மீதுகனிபவளத்........................ *
தயலுளவேமுத்தமொத்தநிரையரனம்பலத்தி.................. *
னியலுளவேயிணைச்செப்புவெற்பாநினதீங்கொடிமேற்........ *
புயலுளவேமலர்சூழ்ந்திருடூங்கிப்புரள்வனவே.............. (௧௫)

(அவ்விடத்தேகல்.)

அரிவைபதுநிலைமையறிந்தவனுரைப்ப
எரிகதிர்வேலோனேகிய - து.

எயிற்குலமூன்றிருந்தீயெய்தவெய்தவன்றில்லையொத்துக்........ *
குயிற்குலங்கொண்டுதொண்டைக்கனிவாய்க்குளிர்முத்தநிரைத்... *
தயிற்குலவேல்கமலத்திற்கிடத்தியனநடக்கு.................... *
மயிற்குலங்கண்டதுண்டேலதுவென்னுடைமன்னுயிரே...... (௧௬)

(மின்னிடைமெலிதல்.)

மன்னனைநினைந் - து
மின்னிடைமெலிந்த - து.

ஆவியன்னாய்கவலேலகலேமென்றளித்தொளித்த................ *
பாவியன்றூர்மிக்கவாவினராய்க்கெழுமற்கழிவுத்.............. *
தூவியன்னார்மன்னியாடிடஞ்சேர்வர்கொலம்பலத்தெம்......... *
மாவியன்றன்பயிலுங்கயிலாயத்தருவரையே.................. (௧௭)

(பொழில்கண்டுமகிழ்தல்.)

மணங்கமழ்பொழிலின்வடிவுக - ண்
டணங்கெனநினைந்தயர்வுநீங்கிய - து.

காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்.................. *
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்......... *
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்...... *
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே. (௧௮)

(உயிரொனவியத்தல்.)

வெறியுறுபொழிலின்வியன்பொதும்பரி
னெறியுறுகுழலிநிலைமைகண்ட - து.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சந்நெகப்போ..*
யாயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போற்..................*
றேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது ....*
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே..........(௩௯)

(தளர்வகன்றுரைத்தல்.)

பனிமதிநுதலியைப்பைம்பொழிலிடைத்
தனிநிலைகண்டுதளர்வகன்றுரைத்த - து

தாதிவர்போதுகொய்யார்தையலாரங்கைகூப்பநின்று..............*
சோதிவரிப்பந்தடியார்சுனைப்புனலாடல்செய்யார் .. ..*
போதிவர்கற்பகநாடுபுல்லென்னத்தம்பொன்னடிப்பா ... ...*
யாதிவர்மாதவமம்பலத்தான்மலையெய்துதற்கே...............(௪௰)

(மொழிபெறவருந்தல்.)

கூடற்கரிதெ - - ன
வாடியுரைத்த - - து.

காவிநின்றேர்தருகண்டர்வண்டில்லைக்கண்ணார்கமலத் ....*
தேவியென்றேஐயஞ்சென்றதன்றேயறியச்சிறிது ... .*
மாவியன்றன்னமென்னோக்கிநின்வாய்திறவாவிடிலென் ....*
னாவியன்றேயமிழ்தேயணங்கேயின்றழிகின்றதே ....(௪௧)

(நாணிக்கண்புதைத்தல்.)

ஆயிடைத்தனிநின்றாற்றாதழிந் - து
வேயுடைத்தோளியோர்மென்கொடிமறைந்த து.

அகலிடந்தாவியவானோனுந்திறைஞ்சம்பலத்தி...... ....*
னிகலிடந்தாவிடையீசற்றொழாரினின்னற்கிடமா ....*
புகலிடந்தான்சென்றெனதுயிர்நையாவகையொதுங்கப் ... .*
புகலிடந்தாபொழில்வாயெழில்வாய்தருபூங்கொடியே ..... (௪௨)

(கண்புதைக்கவருந்தாநிற்றல்.)

வேற்றருங்கண்ணிணைமிளிர்வனவன்றுநின்
கூற்றருமேனியேகூற்றெனக்கென்ற து

தாழச்செய்தார்முடிதன்னடிக்கீழ்வைத்தவனைவிண்ணோர் ... ...*
சூழச்செய்தானம்பலங்கைதொழாரினுள்ளந்துளங்கப்,...........*
போழச்செய்யாமல்வைவேற்கண்புதைத்துப்பொன்னேயென்னைநீ
வாழச்செய்தாய்சுற்றுமுற்றும்புதைநின்னைவாணுதலே.........(௪௩)

(நாண்விடவருந்தல்.)

ஆங்ஙனங்கண்டாற்றளா - இ
நீங்கினநாணொடுநேரிழைநின்ற து.

குருநாண்மலர்ப்பொழில்சூழ்தில்லைக்கூத்தனையேத்தலர்போல்...*
வருநாள்பிறவற்கவாழியரோமற்றென்கண்மணிபோன்... ....*
றொருநாள்பிரியாதுயிரிற்பழகியுடன்வளர்ந்த........ ... ...*
வருநாணளியவழல்சேர்மெழுகொத்தழிகின்றதே......... ..(சச)

(மருங்கணைதல்.)

ஒளிதிகழ்வார்குழலளிகுலம்விலக்கி க்
கருங்களிற்றண்ணன்மருங்கணைந்த து.

கோலத்தனிக்கொம்பருப்பர்புக்கஃதேகுறைப்பவர்தஞ்......*
சீலத்தனகொங்கைதேற்றகிலேஞ்சிவன்றில்லையன்ன..............*
ணாலொத்தநேரிடைநொய்ம்மையெண்ணாது நுண்டேனசையாற்
சாலத்தகாதுகண்டீர்வண்டுகாள்கொண்டசார்வதுவே... ...(சரு)

இன்றியமையாமைகூறல்.)

வென்றிவேலவன்மெல்லியறன - க்
கின்றியமையாமையெடுத்துரைத்த து.

நீங்கரும்பொற்கழற்சிற்றம்பலவர்நெடுவிசும்பும்...... .. ..*
வாங்கிருந்தெண்கடல்வையமுமெய்தினும்யான்மறவேன் ... ...*
றீங்கரும்பும்மமிழ்துஞ்செழுந்தேனும்பொதிந்துசெப்புங்......*
கோங்கரும்புந்தொலைத்தென்னையுமாட்கொண்டகொங்கைகளே...()

(ஆயத்துய்த்தல்.)

தேங்கமழ்சிலம்ப - ன்
பாங்கிற்கூட்டிய - - து

சூளாமணியும்பர்க்காயவன்சூழ்பொழிற்றில்லையன்னாய்க்... .....*
காளாயொழிந்தென்னுருயிராரமிழ்தேயணங்கே...............*
தோளாமணியேபிணையேபலசொல்லியென்னைதுன்று ... .*
தாளார்மலர்ப்பொழில்வாயெழிலாயநணுகுகவே.......... ...(சஎ)

(நின்றுவருந்தல்.)

பாங்கிற்கூட்டிப்பதிவயிற்பெயர்வோ
னீங்கற்கருமைநின்றுநினைந்த து

பொய்யுடையார்க்கரன்போலகலும்மகன்றற்புணரின் ... ...*
மெய்யுடையார்க்கவனம்பலம்போலமிகநணுகு..................*
மையுடைவாட்கண்மணியுடைப்பூண்முலைவாணுதல்வான்..........*
பையுடைவாளரவத்தல்குல்காக்கும்பைம்பூம்புனமே...... ..(சஅ)

(பொழிலிடைச்சேறல்.)

ஐயரிக்கண்ணியையாடிடத்தேசெ - ன்
றெய்துவனெனநினைந்தேந்தல்சென்ற து.

என்னறிவால்வந்ததன்றிதுமுன்னுமின்னும்முயன்றன் ....*
மன்னெறிதந்ததிருந்தன்றுதெய்வம்வருந்தனெஞ்சே ....*
மின்னெறிசெஞ்சடைக்கூத்தப்பிரான்வியன்றில்லைமுந்நீர். ......*
பொன்னெறிவார்துறைவாய்ச்சென்றுமின்றோப்பொழிலிடத்தே.

(பாங்கியிடைச்சேறல்.)

காந்துறைகிளவியிற்காதற்றோழி - யை
இரந்துகுறையுறுவலென்றேந்தல்சென்றது

எளிதன்றினிக்கனிவாய்வல்லிபுல்லலெழின்மதிக்கீற் ....*
றொளிசென்றசெஞ்சடைக்கூத்தப்பிரானையுன்னாரினென்கட் ...*
டெளிசென்றவேற்கண்வருவித்தசெல்லலெல்லாந்தெளிவித் ...*
தளிசென்றபூங்குழற்றோழிக்குவாழியறிவிப்பனே .... (௫௰)

(குறையுறத்துணிதல்.)

ஓரிடத்தவளையொருங்குகண்டேத - ன்
பேரிடர்பெருந்தகைபேசத்துணிந்த து.

குவளைக்கருங்கட்கொடியேரிடையிக்கொடிகடைக்க ....*
ணுவளைத்தனதுயிரொன்றதுதன்னொடுவமையில்லா ....*
தவளைத்தன்பால்வைத்தசிற்றம்பலத்தானருளிலர்போற் ......*
றுவளத்தலைவந்தவின்னலின்னேயினிச்சொல்லுவனே ....(௫௧)

(வேழம்வினாதல்.)

ஏழையரிருவருமிருந்தசெவ்வியு - ன்
வேழம்வினவவெற்பன்சென்ற - து.

இருங்களியாயின்றியானிறுமாப்பவின்பம்பணிவோர் ....*
மருங்களியாவனலாடவல்லோன்றில்லையான்மலையீங் ....*
கொருங்களியார்ப்பவுமிழ்மும்மதத்திருகோட்டொருநீள் ......*
கருங்களியார்மதயானையுண்டோவரக்கண்டதுவே ....(௫௨)

(கலைமான்வினாதல்.)

சிலைமானண்ண - - ல்
கலைமான்வினாய - - து.

கருங்கண்ணனையறியாமைநின்றோன்றில்லைக்கார்ப்பொழில்வாய் *
வருங்கண்ணனையவண்டாடும்வளரிளவல்லியன்னீ ....*
ரிருங்கண்ணனையகணைபொருபுண்புணரிப்புனத்தின் ....*
மருங்கண்ணனையதுண்டோவந்ததீங்கொருவான்கலையே ......(௫௩)

(வழிவினாதல்.)

கலைமான்வினாயகருத்துமுற் றி
மலைமானண்ணல்வழிவினாய து.

சிலம்பணிகொண்டசெஞ்சீறடிபங்கன்றன்சீரடியார் ....*
குலம்பணிகொள்ளவெனைக்கொடுத்தோன்கொண்டுதானணியுங் ...*
கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்க்கயிலைச் ....*
சிலம்பணிகொண்டநுஞ்சீறூர்க்குரைமின்கள்சென்னெறியே (௫௪)

(பதிவினாதல்.)

பதியொடுபிறவினாய்மொழிபலமொழிந் து
மதியுடன்படுக்கமன்னன்வலித்த - து.

ஒருங்கடமூவெயிலொற்றைக்கணைகொள்சிற்றம்பலவன் ....*
கருங்கடமூன்றுகுநால்வாய்க்கரியுரித்தோன்கயிலை ....*
யிருங்கடமூடும்பொழிலெழிற்கொம்பரன்னீர்களின்னே ... ...*
வருங்கடமூர்பகர்ந்தாற்பழியோவிங்குவாழ்பவர்க்கே ....(௫௫)

(பெயர்வினாதல்.)

பேரமைத்தோளிய - ரீ
பெயர்வினாய - து.

தாரென்னவோங்குசடைமுடிமேற்றனித்திங்கள்வைத்த ....*
காரென்னவாருங்கறைமிடற்றம்பலவன்கயிலை ....*
யூரென்னவென்னவும்வாய்திறவீரொழிவீர்பழியேற் ....*
பேரென்னவோவுரையீர்விரையீர்ங்குழற்பேதையரே ......(௫௬)

(மொழிபெறாதுகூறல்.)

தேமொழியவர்வாய்மொழிபெறா - து
மட்டவிழ்தாரோன்கட்டுரைத்த - து.

இரதமுடையநடமாட்டுடையவரெம்முடைய ....*
வரதமுடையவணிதில்லையன்னவரிப்புனத்தார் ....*
விரதமுடையர்விருந்தொடுபேசின்மைமீட்டதன்றேற் ....*
சரதமுடையர்மணிவாய்திறக்கிற்சலக்கென்பவே..............(௫௭)

(கருத்தறிவித்தல்.)

உரைத்ததுரையா - து
கருத்தறிவித்த - - து.

வின்னிறவாணுதல்வேனிறக்கண்மெல்லியலைமல்லற் ....*
றன்னிறமொன்றிலிருத்திநின்றோன்றனதம்பலம்போன் ....*
மின்னிறநுண்ணிடைப்பேரெழில்வெண்ணகைப்பைந்தொடியீர்.
பொன்னிறவல்குலுக்காமோமணிநிறப்பூந்தழையே........(௫௮)

(இடைவினாதல்.)

வழிபதிபிறவினா - ய்
மொழிபலமொழிந்த து.

கலைக்கீழகல்குற்பாரமதாரங்கண்ணார்ந்திலங்கு ... ...*
முலைக்கீழ்ச்சிறிதின்றிநிற்றன்முற்றாதன்றிலங்கையர்கோன் ... ...*
மலைக்கீழ்விழச்செற்றசிற்றம்பலவர்வண்பூங்கயிலைச் ... ...*
சிலைக்கீழ்க்கணையன்னகண்ணீரெதுநுங்கள்சிற்றிடையே ... (௫௯)

(ஐயுறுதல்.)

அடற்கதிர்வேலோன்றொடர்ச்சிநோக்கித்
தையற்பாங்கியையுற்ற - - து

பல்லிலனாகப்பகலைவென்றோன்றில்லைபாடலர்போ ...*
லல்லிலனாகத்தொடேனம்வினாவிவன்யாவன்கொலாம் ... ...*
வில்லிலனாகத்தழைகையில்வேட்டைகொண்டாட்டமெய்யோர் ...*
சொல்லிலனாகற்றவாகடவானிச்சுனைப்புனமே ... (௬௰)

(அறிவுநாடல்.)

வெற்பன்வினாயசொற்பதநோக்கி
நெறிகுழற்பாங்கியறிவுநாடியது.

ஆழமன்னோவுடைத்திவ்வையர்வார்த்தையனங்கனைந்து ... ...*
வீழமுன்னோக்கியவம்பலத்தான்வெற்பினிப்புனத்தே ... ...*
வேழமுன்னாப்பக்கலைபாய்ப்பிறவாய்ப்பின்னுமென்றழைபாய் ... *
மாழைமென்னோக்கியிடையாய்க்கழிந்ததுவந்துவந்தே ... (௬௧)

(வாட்டம்வினாதல்.)

மின்னிடைமடந்தைதன்னியனோக் கி
வீங்குமென்முலைப்பாங்கிபகர்ந்த து.

திருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க ... ...*
ணொருத்தன்பயிலுங்கயிலைமலையினுயர்குடுமித் ... ...*
திருத்தம்பயிலுஞ்சுனைகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூஉய் ...*
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே ... (௬௨)

(குறையுற்றுநிற்றல்.)

கறையுற்றவேலவ - - ன்
குறையுற்ற - - து

மடுக்கோகடலின்விடுதிமிலன்றிமறிதிரைமீன் ... ...*
படுக்கோபணிலம்பலகுளிக்கோபரன்றில்லைமுன்றிற் ... ...*
கொடுக்கோவளைமற்றுநும்மையர்க்காயகுற்றேவல்செய்கோ ...*
தொடுக்கோபணிமீரணிமீர்மலர்நுஞ்சுரிகுழற்கே ... (௬௩)

(அவன்குறிப்பறிதல்.)

பொற்றொடித்தோளிதன்சிற்றிடைப்பாங்கி
வெறிப்பூஞ்சிலம்பன்குறிப்பறிந்த - து.

அளியமன்னுமொன்றுடைத்தண்ணலெண்ணரன்றில்லையன்னாள்
கிளியைமன்னுங்கடியச்செல்லநிற்பிற்கிளரளகத்......................*
தளியமர்ந்தேறின்வறிதேயிருப்பிற்பளிங்கடுத்த...... ....[தே
வொளியமர்ந்தாங்கொன்றுபோன்றொன்றுதோன்றுமொளிமுகத்

(அவள்குறிப்பறிதல்.)

ஆங்கவள்குறிப்பு - ப்
பாங்கிபகர்ந்த - து.

பிழைகொண்டொருவிக்கெடாதன்புசெய்யிற்பிறவியென்னு....*
மூழைகொண்டொருவன்செல்லாமைநின்றம்பலத்தாடுமுன்னோ *
னுழைகொண்டொருங்கிருநோக்கம்பயின்றவெம்மொண்ணுதன்
மாற்குழைகொண்டொருவனென்றுன்னமுள்ளந்தழைத்திடுமே

(இருவர்நினைவுமொருவழியுணர்தல்.)

அன்புறநோக்காங்கறி - ந்
தின்புறதோழியெண்ணிய - து.

மெய்யேயிவற்கில்லைவேட்டையின்மேன்மனமீட்டிவளும் ......*
பொய்யேபுனத்தினைக்காப்பதிறைபுலியூரனையான்...............*
மையேர்குவளைக்கண்வண்டினம்வாழுஞ்செந்தாமரைவா.........*
யெய்யேமெனினுங்குடைந்தின்பத்தேனுண்டெழிதருமே.. (௧௬)

(பிறைதொழுகென்றல்.)

பிறைதொழுகென்றுபேதைமாதரை
நறுநுதற்பாங்கிநாணநாட்டிய து

மைவார்கருங்கண்ணிசெங்கரங்கூப்புமறந்துமற்றப் ... .*
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே.................*
னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்துச்......*
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே.........(௧௭)

(வேறுபடுத்துக்கூறல்.)

வேய்வளைத்தோளியைவேறுபாடுகண்
டாய்வளைத்தோழியணங்கென்ற து.

அக்கின்றவாமணிசேர்கண்டனம்பலவன்மலயத்...... ....*
திக்குன்றவாணர்கொழுந்திச்செழுந்தண்புனமுடையா... ....*
ளகக்குன்றவாறமர்ந்தாடச்சென்றாளங்கமவ்வவையே ....*
யொக்கின்றவாறணங்கேயிணங்காகுழலைக்கவலே...........(௧௮)

(சுனையாடல்கூறிநகைத்தல்.)

மாணநாட்டியவார்குழற்பேதை - யை
நாணநாட்டிநகைசெய்த - - து.

செந்நிறமேனிவெண்ணீறணிவோன்றில்லையம்பலம்போ..........*
லந்நிறமேனிநின்கொங்கையிலங்கழிகுங்குமமு..............*
மைந்நிறவார்குழன்மாலையுந்தாதும்வளாய்மதஞ்சே............*
ரிந்நிறமும்பெறில்யானுங்குடைவனிருஞ்சுனையே..........(௬௯)

(புணர்ச்சியுரைத்தல்.)

மணக்குறிநோக்கி - - ப்
புணர்ச்சியுரைத்த - - து.

பருங்கண்கவர்கொலைவேழப்படையோன்படப்படர்தீத்..........*
தருங்கண்ணுதற்றில்லையம்பலத்தோன்றடமால்வரைவாய்க்......*
கருங்கண்சிவப்பக்கனிவாய்விளர்ப்பக்கண்ணாரளிபின்..........*
வருங்கண்மலைமலர்சூட்டவற்றோமற்றவ்வான்சுனையே.........(௭௰)

(மதியுடம்படுத்தல்.)

அயில்வேற்கண்ணியொடாடவன்றனக்-குயிரொன்றென
மயிலியற்றோழிமதியுடம்பட்ட - - - து

காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவ...................*
ராகத்துள்ளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமா................*
மேகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற்...................*
றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பதுன்பங்களே (௭௧)

(நடுங்கநாட்டம்.)

நுடங்கிடைப்பாங் - கி
நடுங்கநாட்டிய - து

ஆவாவிருவரறியாவடிதில்லையம்பலத்து........................*
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னாரின்முன்னித்..............*
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித்...............*
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றோராண்டகையே......(௭௨)

(ஆற்றுதுரைத்தல்.)

மல்லற்றிரள்வரைத்தோளவன்
சொல்லாற்றுதுசொல்லியது.

பொருளாவெனைப்புகுந்தாண்டுபுரந்தரன்மாலயன்பா.........*
லிருளாயிருக்குமொளிநின்றசிற்றம்பலமெனலாஞ்..............*
சுருளார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்துடியிடையீ......*
ரருளாதொழியினொழியாதழியுமென்னாருயிரே............(௭௩)

(உலகின்மேல்வைத்துரைத்தல்.)

புலவேலண்ணல்புனைமடலே - - றி
றுலகின்மேல்வைத்துய்த்துரைத்த - து.

காய்சினவேலன்னமின்னியல்கண்ணின்வலைகலந்து... ....*
வீசினபோதுள்ளமீனிழந்தார்வியன்றென்புலியூ........ ... ...*
ரீசனசாந்துமெருக்குமணிந்தோர்கிழிபிடித்துப்...... ....*
பாய்சினமாவெனவேறுவர்சீறூர்ப்பனைமடலே...............(௭௪)

(தன்றுணிவுரைத்தல்.)

மானவேலவன்மடன்மாமி - சை
யானுமேறுவனென்னவுரைத்த து.

விண்ணைமடங்கவிரிநீர்பரந்துவெற்புக்கரப்ப ....*
மண்ணைமடங்கவருமொருகாலத்துமன்னிநிற்கு......... ....*
மண்ணன்மடங்கலதளம்பலவனருளிலர்போற்.....................*
பெண்ணைமடன்மிசையான்வரப்பண்ணிற்றோர்பெண்கொடியே()

(மடலேறும்வகையுரைத்தல்.)

அடல்வேலவனழிவுற் - - று
மடலேறும்வகையுரைத்த - து.

கழிகின்றவென்னையுநின்றநின்கார்மயிறன்னையும்யான் ....*
கிழியொன்றநாடியெழுதிக்கைக்கொண்டென்பிறவிகெட்டின் ..*
றழிகின்றதாக்கியதாளம்பலவன்கயிலையந்தேன் ....*
பொழிகின்றசாரனுஞ்சீறூர்த்தெருவிடைப்போதுவனே...(௭௬)

(அருளாலரிதெனவிலக்கல்.)

அடல்வேலண்ணலருளுடைமையி ன்
மடலேற்றுண்க்கரிதென்ற - து.

தடனும்வணங்குந்தொல்லோனெல்லைநான்முகன்மாலறியாக் ... *
கடனுமுருவத்தரன்றில்லைமல்லற்கண்ணார்ந்தபெண்ணை... ... ...*
யுடனும்பெடையொடொண்சேவலுமுட்டையுங்கட்டழித்து ... *
மடனும்புனைதரின்யார்கண்ணதோமன்னவின்னருளே ......(௭௭)

(மொழிநடையெழுதவரிதெனவிலக்கல்.)

அவையவமரிதினண்ணதீட்டி - னு
மிவையிவைதீட்டவியலாதென்ற து

அடிச்சந்தமால்கண்டிலாதனகாட்டிவந்தாண்டுகொண்டென் ... *
முடிச்சந்தமாமலராக்குமுன்னோன்புலியூர்புரையுங் ....*
கடிச்சந்தயாழ்கற்றமென்மொழிக்கன்னியனநடைக்குப்.........*
படிச்சந்தமாக்கும்படமுளவோநும்பரிசகத்தே ....(௭௮)

(அவயவமெழுதவரிதெனவிலக்கல்.)

அவையவமான - வை
யிவையிவையென்ற - து.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்..........*
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றால்பிறவி......*
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்..............*
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே...()

(உடன்படாதுவிலக்கல்.)

அடுபடையண்ணலழிதுய ரொழிகென
மடநடைத்தோழிமடல்விலக்கிய து.

ஊர்வாயொழிவாயுயர்பெண்ணைத்திண்மடணின்குறிப்புச்........*
சீர்வாய்சிலம்பதிருத்தவிருந்திலமீசர்தில்லைக்.....................*
கார்வாய்க்குழலிக்குன்னாதரமேவாதிக்கற்பித்துக்கண்டா..............*
லார்வாய்தரினறிவார்பின்னைச்செய்கவறிந்தனவே.............(அ௰)

(உடன்பட்டுவிலக்கல்.)

அரவருநுண்ணிடைக்குரவருகூந்தலென்
னுள்ளக்கருத்துவிள்ளாளென்ற - து.

பைந்நாணரவன்படுகடல்வாய்ப்படுநஞ்சமுதா.........................*
மைந்நாண்மணிகண்டன்மன்னும்புலியூர்மணந்தபொன்னிம்....*
மொய்ந்நாண்முதுதிரைவாயாழுந்தினுமென்னின்முன்னு,....*
மிந்நாளிதுமதுவார்குழலாட்கென்கணின்னருளே..........(அக)

(குறிப்பறிதல்.)

நறைவளர்கோதையைக்குறைநயப்பித்த ற்
குள்ளறிகுற்றவொள்ளிழையுரைத்த து.

தாதேய்மலர்க்குஞ்சியஞ்சிறைவண்டுதண்டேன்பருகித்..........*
தேதேயெனுந்தில்லையோன்சேயெனச்சினவேலொருவர்........*
மாதேபுனத்திடைவாளாவருவர்வந்தியாதுஞ்சொல்லா............*
ரேதேசெயத்தக்கதுமதுவார்குழலேந்திழையே.............(அஉ)

(மென்மொழியாற்கூறல்.)

ஒளிருறுவேலவன்றளர்வுறுகின்ற - மை
யின்மொழியவட்குமென்மொழி மொழிந்தது.

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிக்கென்னமாயங்கொலோ.....,*
வெரிசேர்தளிரன்னமேனியனீர்ந்தழையன்புலியூர்ப்...........*
புரிசேர்சடையோன்புதல்வன்கொல்பூங்கணைவேள்கொலென்னத்*
தெரியேமுனையான்பிரியாதொருவனித்தீம்புனமே.........(அ௩)

(விரவிக்கூறல்.)

வன்மொழியின்மனமெலிவதஞ் சி
மென்மொழிவிரவிமிகுத்துரைத்தது,

நீகண்டனையெனின்வாழலைநேரிழையம்பலத்தான் .... *
சேய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின் ...*
வாய்வண்டனையதொர்நாவற்கனிநனிநல்கக்கண்டு .... *
பேய்கண்டனையதொன்றாகிநின்றானப்பெருந்தகையே......(௭௪)

(அறியாள்போறல்.)

அறியாள்போன் று
குறியாள்கூறிய து.

சங்கந்தருமுத்தியாம்பெறவான்கழிதான்கெழுமிப்.............*
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறுலவு ....*
துங்கமலிதலையேந்தலினேர்த்திமைதொல்லைப்பன்மா .... *
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே ....(௭௫)

(வஞ்சித்துரைத்தல்.)

நெஞ்சநெகிழ்வகைவஞ்சித்திவையி - - லை
செஞ்சடையோன்புகழ்வஞ்சிக்குரைத்த - து.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா.............*
திரங்கிடெந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு ....*
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுகாட்டிடென்று.........*
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே ....(௭௬)

(புலந்துகூறல்.)

திருந்தியசொல்லிற்செவ்விபெறா து
வருந்தியசொல்லின்வகுத்துரைத்த து.

உள்ளப்படுவனவுள்ளியுரைத்தக்கவர்க்குரைத்து...............*
மெள்ளப்படிறுதுணிதுணிமேவலிதுவேண்டுவல்யான்............*
கள்ளப்படிறர்க்கருளாவரன்றில்லைகாணலர்போற்..............*
கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுக்களே ....(௭௭)

(வன்மொழியாற்கூறல்.)

கடலுலகறியக்கமழலந்துறைவ - - ன்
மடலேறுமெனவன்மொழிமொழிந்த து.

மேவியந்தோலுடுக்குந்தில்லையான்பொடிமெய்யிற்கையி .....*
லோவியந்தோன்றுங்கிழிநின்னெழிலென்றுரையுளதாற் ....*
றாவியந்தோகன்னியென்னபாவஞ்சொல்லாடல்செய்யான்....*
பாவியந்தோபனைமாமடலேறக்கொல்பாவித்ததே ....(௭௮)

(மனத்தொடுநேர்தல்.)

அடல்வேலவனுற்றனென க்
கடலமிழ்ந்தன்னவள்காணலுற்றது

பொன்னார்சடையோன்புலியூர்புகழா ரெனப்புரிநோ.............*
யென்னலறிவில்லைபாலென்றுனாக்கிலன்வந்தயலார் ....*
சொன்றொனுமித்துரிசுதுன்னைமைத்துணைமனனே..........*
யென்றாழ்துயர்வல்லையேற்சொல்லுநீர்மையினியவர்க்கே ..(௫௯)

(தழைகொண்டுசேறல்.)

கொய்ம்மலர்க்குழலிகுறைநயத்தபி ன்
கையுறையொடுகாளைசென்ற - து.

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர்..............*
பூமென்றழையுமம்போதுங்கொள்ளீர்தமியேபுலம்பன் .. ...*
வாமென்றருங்கொடும்பாடுகள்செய்துநுங்கண்மலராங்...... ..*
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே..... ..(௬௰)

(சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்.)

பிறைநுதற்பேதையைக்குறைநயப்பித்தபின்
வாட்படையண்ணலைச்சேட்படுத்த - து.

ஆரத்தழையராப்பூண்டம்பலத்தனலாடியன்பர்க்...............*
காரத்தழையன்பருளிநின்றோன்சென்றமாமலயத்... ....*
தாரத்தழையண்ணறந்தாலிவையவளல்குற்கண்டா... ... .*
லாரத்தழைகொடுவந்தாரெனவருமையுறவே.................(௬௧)

(நிலத்தின்மைகூறிமறுத்தல்.)

கொங்கலர்தாரோய்கொணர்ந்தகொய்த ழை
எங்குலத்தாருக்கேலாதென்ற - - து.

முன்றகர்த்தெல்லாவிமையோரையும்பின்னைத்தக்கன்முத்தீச் ... *
சென்றகத்தில்லாவகைசிதைத்தோன்றிருந்தம்பலவன்... ....*
குன்றகத்தில்லாத்தழையண்ணறந்தாற்கொடிச்சியருக் ... ...*
இன்றகத்திலலாப்பழிவந்துமூடுமென்றெள்குதுமே..........(௬௨)

(நினைவறிவுகூறிமறுத்தல்.)

மைதவ்ழகண்ணிமனமறிந்தல்ல - து
கொய்தழைதந்தாற்கொள்ளேமென்றது.

யாழார்மொழிமங்கைபங்கத்திறைவனெறிதிரைநீ..................*
ரேழாயெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன...... .. ...*
சூழார்குழலெழிற்றொண்டைச்செவ்வாய்நவ்விசொல்லறிந்தாற். *
றாழாதெதிர்வந்துகோடுஞ்சிலம்பதருந்தழையே... ....(௬௩)

(படைத்துமொழியான்மறுத்தல்.)

அருந்தழைமேன்மேற்பெருந்தகைகொணர - ப்
படைத்துமொழிகிளவியிற்றடுத்தவண்மொழிந்த து.

ஏழில்வாயிளவஞ்சியும்விரும்புமற்றிறைகுறையுண் ....*
டழல்வாயவிரொளியம்பலத்தாடுமஞ்சோதியந்தீங் ....*
குழல்வாய்மொழிமங்கைபங்கன்குற்றாலத்துக்கோலப்பிண்டிப்.. *
பொழில்வாய்தடவரைவாயல்லதில்லையிப்பூந்தழையே... ...(கூச)

(நாணுரைத்துமறுத்தல்.)

வாணுதற்பே - தை
நாணுதலுரைத்த து.

உறுங்கண்ணிவந்தகணையுரவோன்பொடியாயொடுங்கத்... ...... *
தெறுங்கண்ணிவந்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய் .. ..*
நறுங்கண்ணிசூட்டினுநாணுமென்வாணுதனகைத்தொண்பூங்.....*
குறுங்கண்ணிமேவுந்திளமந்திகணுணுமிக்குன்றிடத்தே... ...(கூரு)

(இசையாமைகூறிமறுத்தல்.)

வகைதீர்குலத்தி ற்
கிசையாதென்றது.

நறமனவேங்கையின்பூப்பயில்பாறையைநாகநண்ணி... ... ... *
மறமனவேங்கையெனநனிபஞ்சுமஞ்சார்சிலம்பா... ....*
குறமனவேங்கைச்சுணங்கொடணங்கலர்கூட்டுபவோ ... .*
நிறமனவேங்கையதளம்பலவனெடுவரையே...................(கூசா)

(செவ்வியிலளென்றல்.)

நவ்விநோக் - - கி
செவ்வியிலளென்றது.

கற்றிலகண்டன்னமென்னடைகண்மலர்நோக்கருளப்..........*
பெற்றிலமென்பிணைபேசப்பெறுகிள்ளைபிள்ளையின்றென் ... *
றற்றிலனூற்றதறிந்திலளாகத்தொளிமிளிரும்... ....*
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே...... ... .(கூஎ)

(காப்புடைத்தென்றுமறுத்தல்.)

காப்புடைத்தென் று
சேட்படுத்த து

முனிதருமன்னையுமென்னையர்சாலவுமூர்க்கரின்னே... ... ...*
தனிதருமிந்நிலத்தன்றையகுன்றமுந்தாழ்சடைமேற்...........*
பனிதருதிங்களணியம்பலவர்பகைசெருக்கும்........................*
குனிதருதிண்சிலைக்கோடுசென்றுன்சுடர்க்கொற்றவனே ... (கூஅ)

(நீயேகூறுகெனமறுத்தல்.)

அஞ்சுதும்பெருமபஞ்சின்மெல்லடியைக்
கூறுவநீயேகூறுகென்ற - - - - து.

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற் ...... *
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபைந்தேனொடுங்கடுவன் .... *
மந்தியின்வாய்க்கொடுத்தோம்புஞ்சிலம்பமனங்கனிய .... *
முந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே (௬௯)

(குலமுறைகூறிமறுத்தல்.)

தொழுகுலத்தீர்சொற்காகேம்
இழிகுலத்தேமெனவுரைத்தது.

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக் .... *
கொங்கம்பழனத்தொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர் .... *
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாபதைப்பச் .... *
சிங்கந்திரிதருசீறூர்ச்சிறுமியென்றேமொழியே .... (௭௰)

(நகையாடிமறுத்தல்..)

வாட்டழையெதிராதுசேட்படுத்தற் - கு
மென்னகைத்தோழியின்னகைசெய்தது.

சிலையொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை .... *
மலையொன்றுமாமுகத்தெம்மையரெய்கணைமண்குளிக்குங் ... ... *
கலையொன்றுவெங்கணையோடுகடுகிட்டதென்னிற்கெட்டேன் .... *
கொலையொன்றுதிண்ணியவாறையர்கையிற்கொடுஞ்சிலையே. (௭௧)

(இரக்கத்தொடுமறுத்தல்.)

கையுறையெதிராதாகாதற்றோழி
ஐயநீபெரிதயர்த்தனையென்றது.

மைத்தழையாநின்றமாமிடற்றம்பலவன்கழற்கே .... *
மெய்த்தழையாநின்றவன்பினர்போலவிதிர்விதிர்த்துக் .... *
கைத்தழையேந்திக்கடமாவினாய்க்கையில்வில்லின்றியே .... *
பித்தழையாநிற்பராலென்னபாவம்பெரியவரே .... (௭௨)

(சிறப்பின்மைகூறிமறுத்தல்.)

மாந்தளிருமலர்நீலமு - ம்
ஏந்தலிம்மலையில்லையென்றது.

அக்குமரவுமணிமணிக்கூத்தன்சிற்றம்பலமே .... *
யொக்குமிவளொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா .... *
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு .... *
மிக்குன்றிலென்றுமலர்ந்தறியாதவியல்பினவே .... *

(இளமைகூறி மறுத்தல்.)

முளையெயிற்றரிவை
விளைவிலளென்றது.

உருகுதலைச்சென்றவுள்ளத் துமம்பலத்தும்மொளியே ... ...*
பெருகுதலைச்சென்றுநின்றேன்பெருந்துறைப்பிள்ளைகள்ளார் *
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா ... ...*
வொருகுதலைச்சின்மழலைக்கென்னோவையவோதுவதே... ...(௫௪)

(மறைத்தமைகூறிமறுத்தல்.)

என்னைமறைத்தபினெண்ணியதறிதென
நன்னுதற்றோழிநகைசெய்த - - து.

பண்டாலியலுமிலைவளர்பாலகன்பார்கிழித்துத் .. ..*
தொண்டாலியலுஞ்சுடர்க்கழலோன்றொல்லைத்தில்லையின்வாய் ...*
வண்டாலியலும்வளர்பூந்துறைவமறைக்கிலென்னைக் ... ...*
கண்டாலியலுங்கடனில்லைகொல்லோகருதியதே... ... ...(௫௫)

(நகைகண்டுமகிழ்தல்.)

இன்னகைத்தோழிமென்னகைகண்டு
வண்ணக்கதிர்வேலண்ணலுரைத்தது.

மத்தகஞ்சேர்தனிநோக்கினன்வாக்கிறந்தூறமுதே... ... ...*
யொத்தகஞ்சேர்ந்தென்னையுய்யநின்றோன்றில்லையொத்திலங்கு *
முத்தகஞ்சேர்மென்னகைப்பெருந்தோளிமுகமதியின் ... ...*
வித்தகஞ்சேர்மெல்லெனோக்கமன்றேவென்விழுத்துணையே.(௫௬)

(அறியாள்போன்றுநினைவுகேட்டல்.)

வேந்தன்சொன்னமாந்தளிர்மேனியை
வெறியார்கோதையறியேனென்ற - து.

விண்ணிறந்தார்நிலம்விண்டவரென்றுமிக்காரிருவர்... ... ... *
கண்ணிறந்தார்தில்லையம்பலத்தார்கழுக்குன்றினின்று... ... ...*
தண்ணறுந்தாதிவர்சந்தனச்சோலைப்பந்தாடுகின்றா... ... ...*
ரெண்ணிறந்தாரவர்யார்கண்ணதோமன்னநின்னருளே ... ...(௫௭)

(அவையவங்கூறல்.)

அவையவமவளு - க்
கிவையிவையென்றது

குவ்வினகொங்கைகுரும்பைகுழல்கொன்றைகொவ்வைசெவ்வாய்.*
கவ்வினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர்... ... ...*
தவ்வினைதீர்ப்பவன்றாழ்பொழிற்சிற்றம்பலமனையாட்... ... ...*
குவ்வினநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே... ...(௫௮)

(கண்ணயந்துரைத்தல்.)

கண்ணிணைபிறழ்வ - - ன
வண்ணமுரைத்த - - து.

ஈசற்கியாம்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவெம் ....*
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்......*
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம். ....*
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே........(௱௬)

(தழையெதிர்தல்.)

அகன்றவிடத்தாற்றாமைகண் - டு
கவன்றதோழிகையுறையெதிர்ந்தது.

தோலாக்கரிவென்றதற்குந்துவள்விற்குமில்லின்றொன்மைக்.......*
கேலாப்பரிசுளவேயன்றியேலேமிருஞ்சிலம்ப ....*
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற் ....*
கோலாப்பிரசமன்னாட்கையநீதந்தகொய்தழையே.............(௱௰)

(குறிப்பறிதல்.)

தழையெதிராதொழிவதற்கோ - ர்
சொல்லறியேனெனப்பல்வளைக்குரைத்தது.

கழைகாண்டலுஞ்சுளியுங்களியானையன்னான்கரத்திற்............*
றழைகாண்டலும்பொய்தலைப்பமுன்காண்பனின்றம்பலத்தா..*
னுழைகாண்டலுநினைப்பாகுமென்னோக்கிமன்னோக்கக்கண்டா..*
லிழைகாண்பணைமுலையாயறியேன்சொல்லுமீடவற்கே......(௱௰௧)

(குறிப்பறிந்துகூறல்.)

ஏழைக்கிருந்த - - ழை
தோழிகொண்டுரைத்த - து.

தவளத்தநீறணியுந்தடந்தோளண்ணறன்னொருபா..............*
லவளத்தனாமகனாந்தில்லையானன்றுரித்ததன்ன.....................*
கவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந் ....*
துவளத்தகுவனவோசுரும்பார்குழற்றூமொழியே..........(௱௰௨)

(வகுத்துரைத்தல்.)

கடித்தழைகொணர்ந்தகாதற்றோ - ழி
மடக்கொடிமாதர்க்குவகுத்துரைத்த - து.

எறும்பழித்தழையேற்பின்மற்றேலாவிடின்மடன்மா................*
வேறுமவனிடபங்கொடியேற்றிவர்தம்பலத்து..................*
ளேறுமரன்மன்னுமீங்கோய்மலைநம்மிரும்புனங்காய்ந் ....*
தேறுமலைதொலைத்தாற்கென்னையாஞ்செய்வதேந்திழையே.(௱௰௩)

(தழையேற்பித்தல்.)

கருங்குழன்மடந்தைக்கரும்பெறற்றோ - ழி
இருந்தழைகொள்கெனவிரும்பிக்கொடுத்த - து.

தெவ்வரைமெய்யெரிகாய்சிலையாண்டென்னையாண்டுகொண்ட.....*
செவ்வரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கயிலை.................*
யவ்வரைமேலன்றியில்லைக்கண்டாயுள்ளவாறருளா.............*
லிவ்வரைமேற்சிலம்பன்னொளிதிற்றந்தவீர்ந்தழையே......(௱௰௪)

(தழைவிருப்புரைத்தல்.)

விருப்பவட்டோ - - ழி
பொருப்பற்குரைத்த - து

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றில்லையம்பலஞ்சூழ்.......*
தேசத்தனசெம்மனீதத்தனசென்றியான்கொடுத்தேன்............*
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குல்பெயர்ந்தரைத்துப்.........*
பூசிற்றிலளன்றிச்செய்யாதனவில்லைபூந்தழையே...............(௱௰௫)

(குறியிடங்கூறல்.)

வாடிடத்தண்ணல்வண்டழையெதிர்ந்த வ
ளாடிடத்தின்னியல்பறியவுரைத்த - து.

வானுழைவாளம்பலத்தரன்குன்றென்றுவட்கிவெய்யோன்......*
தானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற்.............*
றேனுழைநாகமலர்ந்துதிகழ்பளிங்கான்மதியோன்...............*
கானுழைவாழ்வுபெற்றுங்கெழில்காட்டுமோர்கார்ப்பொழிலே...()

(ஆடிடம்படர்தல்.)

வண்டழையெதிர்ந்தவொண்டொடிப்பாங்கி
நீடமைத்தோளியொடாடிடம்படர்ந்த து.

புயல்வளருசன்முன்னோடிப்பொன்னேபின்னைப்போய்ப்பொலியு*
மயல்வளர்குன்றினின்றேற்றுமருவிதிருவுருவிற்..................*
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாதரந்தீர்த்தருளுந்...............*
தயல்வளர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே......(௱௰௭)

(குறியிடைக்கொண்டுசேறல்.)

அணிவளராடிடத்தாயவெள் - ள
மணிவளர்கொங்கையைமருங்ககன்ற து.

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூஉய்ச்சிற்றின்முற்றிழைத்துச்...*
சுனைவளம்பாய்ந்துதுணைமலர்கொய்துதொழுதெழுவோர்......*
வினைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற்................*
புனைவளர்கொம்பரன்னாயன்னகாண்டும்புனயயிலே......(௱௰௮)

(இடத்துய்த்துநீங்கல்.)

மடத்தகைமாதரையிடத்தகத்துய்த் - து
நீங்கலுற்றபாங்கிபகர்ந்த - - து.

நரல்வேயினநினதோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப்........*
பரல்வேயறையுறைக்கும்பஞ்சடிப்பரன்றில்லையன்னாய்..........*
வரல்வேய்தருவனிங்கேநிலுங்கேசென்றுன்வார்குழற்கீர்ங் .... *
குரல்வேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவந்தே......(௱௰௯)

(உவந்துரைத்தல்,)

களிமயிற்சாயலையொருசிறைக்கண் - டு
ஒளிமலர்த்தாரோனுவந்துரைத்த - து.

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க.....................*
ணெடுமாலெனவென்னைநீநினைந்தோநெஞ்சத்தாமரையே ......*
யிடமாவிருக்கலுற்றோதில்லைநின்றவனீர்ங்கயிலை ....*
வடமார்முலைமடவாய்வந்துவைகிற்றிவ்வார்பொழிற்கே .. (௱௨௰)

(மருங்கணைதல்)

வாணுதலரிவைநாணுதல்கண் - டு
கோதைவேலவனுதரவுரைத்த - து.

தொத்தீன்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்னி.*
முத்தீன்குவளைமென்காந்தளின்மூடித்தன்னேரளப்பா.......*
ளொத்தீர்ங்கொடியினொதுங்குகின்றாண்மருங்குன்னெருங்கப் ...*
பித்தீர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருக்கின்றதே....(௱௨௧)

(பாங்கியறிவுரைத்தல்.)

நெறிகுழற்பாங் - - கி
அறிவறிவித்த - - து.

அளிநீடளகத்தினட்டியதாதுமணியணியு..................*
மொளிநீள்சுரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுந்தண்ணறவுண்........*
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாட்கலங்க...........*
றெளிநீயனையபொன்னேபன்னுகோலந்திருநுதலே ......(௱௨௨)

(உண்மகிழ்ந்துரைத்தல்.)

தண்மலர்க்கோதை - - யை
உண்மகிழ்ந்துரைத்த - து.

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன்றிருக்கழலே..................*
கெழுநீர்மையிற்சென்றுகிண்கிணிவாய்க்கொள்ளுங்கள்ளகத்த ... *
கழுநீர்மலரிவள்யானதன்கண்மருவிப்பிரியாக்.....................*
கொழுநீர்நறப்பருகும்பெருநீர்மையளிக்குலமே.........(௱௨௩)

(ஆயத்துய்த்தல்.)

கனைகடலன்னகார்மயிற்கணத்து - ப்
புனைமடமானைப்புகவிட்ட - து.

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவி .... *
லெழுந்தார்மதிக்கமலம்மெழிறத்தெனவிப்பிறப்பி .... *
லழுந்தாவகையெனையாண்டவன்சிற்றம்பலமனையாய் .... *
செழுந்தாதவிழ்பொழிலாயத்துச்சேர்கதிருத்தகவே ......(௱௨௪)

(தோழிவந்துகூடல்.)

நெறியுறுகுழலியைநின்றிடத்துய்த்து - ப்
பிறைநுதற்பாங்கிபெயர்ந்தவட்குரைத்த து.

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த ......*
மின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த .... *
மென்னனையாய்மறியேபறியேல்வெறியார்மலர்க .... *
ளின்னனயான்கொணர்ந்தேன்மணந்தாழ்குழற்கேய்வனவே(௱௨௫)

(ஆடிடம்புகுதல்.)

துனிவிளையாடியதாழ்குழற்றோ - ழி
பனிமதிநுதலியொடாடிடம்படர்ந்த து.

அறுகானிறைமலரைம்பானிறையணிந்தேனணியார் ....*
குறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லாயமெல்லப்புகுக ... *
சிறுகான்மருங்குல்வருந்தாவகைமிகவென்சிரத்தி.................*
னுறுகால்பிறர்க்கரியோன்புலியூரன்னவொண்ணுதலே ... (௱௨௬)

(தனிகண்டுரைத்தல்.)

வேயொத்ததோளியையாயத்துய்த்துக்
குனிசிலையண்ணலைத்தனிகண்டுரைத்தது

தழங்குமருவிபெஞ்சிறார்ப்பெருமவிதுமதுவுங்.....................*
கிழங்குமருந்தியிருந்தெம்மொடின்றுகிளர்ந்துகுன்றர்.........*
முழங்குங்குரவையிரவிற்கண்டேகுகமுத்தன்முத்தி ....*
வழங்கும்பிரானெரியாடிதென்றில்லைமணிநகர்க்கே ... .(௱௨௭)

(பருவங்கூறிவரைவொடுவிலக்கல்.)

மாத்தளிர்மேனியைவரைந்தெய் - தா
தேந்தலிவ்வாறியங்கலென்ற - து.

தள்ளிமணிச்சந்தமுந்தித்தறுகட்கரிமருப்புத்.........................*
தெள்ளிநறவந்திசைதிசைபாயுமலைச்சிலம்பா ....*
வெள்ளிமலையன்னமால்விடைபோன்புலியூர்விளங்கும் ... ...*
வள்ளிமருங்குல்வருத்துவபோன்றவனமுலையே...............(௱௨௮)

(வரைவுடன்படாது மிகுத்துக்கூறல்.)

வரைவுகடாயவாணுதற்றோழிக் - கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்தது.

மாடஞ்செய்பொன்னகருந்நிகரில்லையிம்மாதர்க்கென்னப்... ...*
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையையுள்ளலரைக்... ...*
கீடஞ்செய்தென்பிறப்புக்கெடத்தில்லைநின்றோன்கயிலைக் ... ...*
கூடஞ்செய்சாரற்கொடிச்சியென்றேநின்றுகூறுவதே ...(ாஉகூ)

(உண்மைகூறிவரைவுகடாதல்.)

கால்வரைநாடனில்லதுரைப் - ப
ஆங்கவளுண்மைபாங்கிபகர்ந்த து.

வேய்தந்தவெண்முத்தஞ்சிந்துபைங்கார்வரைமீன்பரப்பிச்......*
சேய்தந்தவானகமானுஞ்சிலம்பதன்சேவடிக்கே ....*
யாய்தந்தவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற்... ... .*
றாய்தந்தைகானவரேனலெங்காவலித்தாழ்வரையே.......(ாஙய)

(வருத்தங்கூறிவரைவுகடாதல்.)

கனங்குழைமுகத்தவன்மனங்குழைவுணர்த் தி
நிரைவளைத்தோழிவரைவுகடாய - து.

மன்னுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரைவென்................*
றுன்னுமதற்குத்தளர்ந்தொளிவாடுதிருமபரொலாம்...............*
பன்னும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான்... ....*
பொன்னங்கழல்வருத்தார்புலனென்னப்புலம்புவனே.... ..(ாஙந)

(தாயச்சங்கூறிவரைவுகடாதல்.)

மடத்தகைமாதர்க்கடுப்பனவறி - யா
வேற்கட்பாங்கியேற்கவுரைத்த து

பணித்துண்டஞ்சூடும்படர்சடையம்பலவன்னுலகந்... .... *
தணித்துண்டவன்றொழுந்தாளோன்கயிலைப்பயில்சிலம்பா... ...*
கனித்தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக்கண்டழிவுற் .....*
றினிக்கண்டிலம்பற்றுச்சிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே ...()

(இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.)

விற்செறிநுதலி - யை
இற்செறிவறிவித்த - து.

ஈவிளையாடநறவிளைவோர்ந்தெமர்மால்பியற்றும்... ....*
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப்......*
போய்விளையாடலென்றாளன்னையம்பலத்தான்புரத்திற்... ......*
றீவிளையாடநின்றேவிளையாடிதிருமலைக்கே .. ..(ாஙங)

(தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்.)

விற்செறிநுதலியையிற்செறிவிப்பொன்
றொளிமேவலவற்குவெளியேயுரைத்த து.

சுற்றஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழாதுதொல்சீர் ... ...*
கற்றமறிபலரிற்சிலம்பாவிடைநைவதுகண் ... ...*
டெற்றாந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார் ... ...*
மற்றாஞ்சிலப்பலசீறூர்பகர்பெருவார்த்தைகளே ... ... (௱௫௪)

(எதிர்கோள்கூறிவரைவுகடாதல்.)

ஏந்திழைதோழியேந்தலைமுன்னி - க்
கடியாமாறுநொடிகென்ற - து.

வழியுமதுவன்னையென்னின்மகிழும்வந்தெந்தையுநின் ... ... *
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக் ... ... *
குழியும்பரேத்துமெங்கூத்தன்குற்றாலமுற்றுமறியக் ... ... *
கெழியும்மவேபணைத்தோள்பலவென்னேகிளக்கின்றதே ...(௱௫௫)

(ஏறுகோள்கூறிவரைவுகடாதல்.)

என்னையர்து - ணி
வின்னதென்ற து.

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண் ... ... *
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீர்முல்லைவேலியெம்மூர் ... *
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்வியன்றென்புலியூ ... ... *
ருடையார்கடவிவருவதுபோலுருவினதே ... ... (௱௫௬)

(அயலுரையுரைத்துவரைவுகடாதல்.)

கயல்புரைகண்ணி - யை
அயலுரையுரைத்த - து.

உருப்பனையன்னகைக்குன்றொன்றுரித்துரவூரெரித்த ... ... *
நெருப்பனையம்பலத்தாதியையும்பர்சென்றேற்றிநிற்குந் ... ... *
திருப்பனையூரனையாளைப்பொன்னாளைப்புனைதல்செப்பிற் ... ... *
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே.()

(தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்.)

ஏனல்விளையாட்டினியில்லையெ - - ன
மானற்றோழிமடந்தைக்குரைத்த - து.

மாதிடங்கொண்டம்பலத்துநின்றோன்வடவான்கயிலைப் ... ... *
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவென்று *
தாதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்சொரியநின்று ... ... *
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே. (௱௫௮)

(பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்.)

அகல்வரைநாடனை - ப்
பகல்வரலென்ற - - து.

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துநின்றும்வருதேன்............*
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார்............*
நொடிவார்நமக்கினிநோதகயானுமக்கென்னுரைக்கேன்..........*
முடிவார்தினையெமர்காவேம்பெருமவித்தண்புனமே......(௱௬௯)

(தினையொடுவெறுத்துவரைவுகடாதல்.)

தண்புனத்தோடுதளர்வுற்று - ப்
பண்புனைமொழிப்பாங்கிபகர்ந்த து.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று......*
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற்......*
றினைவித்திக்காத்துச்சிறந்துநின்றேமுக்குச்சென்றுசென்று. ...*
வினைவித்திக்காத்துவிளைவுண்டதாகிவிளைந்ததுவே.........(௱௭௰)

(வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதல்)

தீங்குகவினிநெடுந்தகையெ - ன
வேங்கைமேல்வைத்துவிளம்பிய து.

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய்..........*
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய்..........*
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான்.........*
தினைகெடச்செய்தி[illegible]ண்டோவித்திருக்கணியே......(௱௭௧)

(இரக்கமுற்றுவரைவுகடாதல்.)

செழுமலைநாடற்கு - க்
கழுமலுற்றிரங்கிய - து.

வழுவாவியலெம்மலையர்விதைப்பமற்றியாம்வளர்த்த............*
கொழுவார்தினையின்குழாங்களெல்லாமெங்குழாம்வணங்குஞ்....*
செழுவார்கழற்றில்லைச்சிற்றம்பலவரைச்சென்றுநின்று........*
தொழுவார்வினைநிற்றிலேநிற்பதாயதித்தொல்புனத்தே...(௱௭௨)

(கொய்தமைகூறிவரைவுகடாதல்.)

நீடிரும்புனத்தினியாடேமென் - று
வரைவுதோன்றவுரைசெய்த - து.

